*Maize Milling Plant, Udumalpet*

* 13. *Q.* **DR. T. R. JANARTHANAM** (on behalf of Thiru S. J. Sadiq Pasha): Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether it is a fact that a Maize Milling Plant in Udumalpet which was in good condition was sold by the Tamil Nadu Agro Industries Corporation; and

(*b*) if so, the details of the transaction?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகம் உடுமலைப்பேட்டையில் உள்ள மக்காச்சோள மாவாலையை இன்னும் விற்கவில்லை. சோள ரவைக்கு பொதுமக்களிடம் போதிய வரவேற்பு இல்லாத காரணத்தால், இந்த ஆலை வியாபார ரீதியில் இயங்க இயலவில்லை. எனவே இவ்வாலையை விற்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு, டெண்டர்கள் அனுப்புமாறு கேட்டு தமிழக ஆங்கில நாளேடுகளில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. டெண்டர்கள் பெற கடைசி நாள் 31—10—1983 ஆகும். வரப்பெற்ற டெண்டர்களை ஆய்வு செய்த பின் இதுபற்றி முடிவெடுக்கப்படும் என்று தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகம் தெரிவித்துள்ளது.

புகையிலை ஆராய்ச்சி நிலையம்.

* 14. **வினா—டாக்டர் இரா. சனார்த்தனம் (திரு. க. மீனாட்சிசுந்தரம் சார்பில்) :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழகத்தில் புகையிலை ஆராய்ச்சிக்கென தனி நிலையம் ஏதும் உள்ளதா ?

(இ) இல்லையெனில், அதனை அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(உ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** (அ) ஆம். மதுரை மாவட்டத்தில் வேடசந்தூரில் உள்ளது.

(இ) கேள்வி எழவில்லை.

(உ) மதுரை மாவட்டத்தில் வேடசந்தூரில் உள்ள புகையிலை ஆராய்ச்சி மையம், மைய அரசின் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் கட்டுப்பாட்டில் (I.C.A.R.) இயங்கி வருகிறது.

1984 பிப்ரவரி 15]

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** தலைவரவர்களே, புகையிலை ஆராய்ச்சி நிலையம் ஏதாவது புதிய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறதா? புகை பிடிப்பதில் ஆபத்து இல்லாத நிலை இருப்பதாக ஏதாவது சொல்லியிருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவரவர்களே, ஆராய்ச்சி மையத்தின் நோக்கம் புகையிலையை ஆபத்தில்லாத அளவுக்குக் கொண்டு வருவது என்பதல்ல. உணவியல், தாவரவியல் ஆராய்ச்சிகளைத்தான் அது மேற்கொள்கிறது.

சிறுவர்களைப் பணியில் அமர்த்தல்.

*** 15. வினா—டாக்டர் இரா. சனார்த்தனம் (திரு. ம. சங்காலிங்கம் சார்பில்) :** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) சிறுவர்கள் பணியில் அமர்த்தப்படுவதைத் தடை செய்யும் வகையில் புதிய சட்டம் எதும் கொண்டுவர செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** தலைவர் அவர்களே, சிறுவர்களை வேலைகளில் அமர்த்துகிற காரியம் பல இடங்களில் நடக்கிறது. இன்னும் ஸ்கூட்டர், கார், மெக்கானிக் தொழில் துறையிலும் சிறுவர்களை இதுபோல் வேலைக்கு அமர்த்துகிறார்கள். அவர்கள் குடும்பச் சூழ்நிலையில் அவ்வாறு வேலைக்கு வருவது தவிர்க்க முடியாதது என்றாலும், அந்தச் சிறுவர்களுக்கு உதவுகிற வகையில் கல்வி அளிப்பது போன்ற ஏற்பாடுகளைச் செய்ய இந்த அரசு நடவடிக்கை மேற்கொள்ள இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவரவர்களே, மேற்கொண்டு வருகிறது.

**திரு. ஆ. நல்லசிவன் :** சிறுவர்களைப் பணியில் அமர்த்துவது குறித்து பரிசிலிப்பதற்காக திரு. அர்பான்ஸ் சிங் தலைமையில் குழு அமைக்கப் பட்டது. அந்தக் குழுவின் ரிப்போர்ட்டு இந்த அரசுக்குக் கிடைத்திருக்கிறதா? ஆம் எனில், அதன்மீது அரசின் மேல்நடவடிக்கை என்ன? சிறுவர்களுக்குப் பகுதி நேரப் படிப்பும், பகுதிநேர வேலையும் அளிக்கும் திட்டத்தைச் செயல் படுத்தும் நோக்கம் அரசுக்கு இருக்கிறதா?